


ஏதாவது நல்ல காரியம் தொடங்குகிறார்கள் என்றால், அதை அறிவிப்பதன் பொருட்டு முதலில் நாகஸ்வர கேசட் போடுவார்கள். அல்லது ஒரு மூலையில் மேடை போட்டு வித்துவான் உட்கார்ந்து வாசிக்கத் தொடங்குவார். சினிமா தியேட்டரில் படம் தொடங்குவதற்கு முன்னால், 'பீகாரில் வெள்ளம்' என்று ஃபிலிம் டிவிஷனின் மழை பொழியும் படம் காட்டுவார்கள். அட, ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போய் உட்கார்ந்து பாருங்கள். சாப்பிட நீங்களும் பரிமாற அவர்களும் ஆயத்தமாவதை உறுதிப்படுத்தும் விதத்தில், நீங்கள் கேட்காமலேயே ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டுவந்து வைப்பார்கள்.

ஏதாவது ஒன்றில் ஆரம்பித்தாக வேண்டும். ஆனால் பொருத்தமாக. சரியாக. எனில், ஒரு தீவிரவாத இயக்கம் தன்னுடைய ஒரு மிகப்பெரிய திட்டத்தை எப்படித் தொடங்கினால் சரியாக இருக்கும்?

உதாரணமாக, ஒரு குண்டு வைப்பதுதான் திட்டம் என்றால், அதை எப்படித் தொடங்கலாம்? 'அபடைஸராக' எதை முன்வைக்கலாம்?

இந்தத் தொடரிலும், இதற்கு முன் இந்த இடத்தில் வந்துகொண்டிருந்த பிற தொடர்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் ஒற்றைச் சொல்லாகப் பார்த்துக்கொண்டிருந்த ஜமா இஸ்லாமியாவுக்குள் இப்போது நுழையப் போகிறோம். மூச்சைப் பிடித்துக்கொள்ளுங்கள். தெற்காசியாவின் அல் காயிதா என்று வருணிக்கப்படும் இயக்கம் அது. இந்தோனேஷியாவில் நிலைகொண்டு, சிங்கப்பூர், ப்ரூனே, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா, ஆஸ்திரேலியா என்று கிளை பரப்பியிருக்கும் மிகப்பெரிய நெட் ஒர்க் கொண்டது. மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான தீவிரவாதப் போராளி இயக்கங்களுக்கு, கிழக்கு மற்றும் தெற்காசியாவில் என்ன காரியம் ஆகவேண்டுமானாலும் உடனே, 'கூப்பிடு ஜமா இஸ்லாமியாவை!'

நம்ப முடியாத அளவுக்கு ஆள் பலம். மிரட்டும் பொருளாதார பலம். உலகில் எந்த ஒரு நவீன ஆயுதம் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டாலும், உடனடியாக ஒரு காப்பி இந்தோனேஷியாவுக்கு வந்துவிடும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆயுத பலம். சந்தேகமில்லாமல் ஆசிய நிலப்பரப்பின் அதி தீவிர அபாயம் அது.

ஒசாமா பின்லேடனின் நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவர் என்றும், அல் காயிதாவின் 9/11 திட்டத்தின் சூத்திரதாரியான காலீத் ஷேக் முஹம்மதுவின் உயிர்த்தோழர் என்றும் வருணிக்கப்படுகிற, இன்றைக்கு அமெரிக்க அரசால் கைது செய்யப்பட்டு க்யூபாவை அடுத்த ஒரு ரகசியத் தீவில் சிறைவைக்கப்பட்டிருக்கிற ஹம்பாலி என்கிற ரிதுவன் இஸாமுத்தீனை (Riduan Isamuddin) ராணுவத் தலைவராகக் கொண்ட இயக்கம் இது.(சித்தாந்த, அரசியல் தலைவர்கள் தனி.)

ஜமா என்றால் கூட்டம் அல்லது குழு என்று சொல்லலாம். அர்த்தம் புரிந்துவிடுகிறது அல்லவா? எளிமையான பொருள்தான். ஆனால், ஜமா இஸ்லாமியாவின் செயல்பாடுகளை, அதற்கான காரணங்களை, அவர்களது நெட் ஒர்க் பலத்தைப் புரிந்துகொள்வது அத்தனை எளிமையானதல்ல. ஒரு தோற்றத்தில் தனியொரு தீவிரவாத இயக்கம் போலவும், இன்னொரு தோற்றத்தில் மிகப்பெரிய இயக்கங்களின் பகுதி நேர ஃப்ராஞ்சைசீஸ் போலவும் தெரியும். எந்தக் காரியத்தைத் தங்கள் சொந்த முடிவின்பேரில் செய்கிறார்கள், எதை அடுத்தவர்களுக்காகச் செய்து கொடுக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியாது. ஆனாலும் தொடர்ந்து 'காரியங்கள்' செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கில். பல நூற்றுக்கணக்கில்.

ஒரு பொருத்தமான உதாரணத்துடன் ஆரம்பிக்கலாம். முதலில் பார்த்த அந்த அபடைஸர்...

அக்டோபர் மாதம் 12-ம் தேதி, 2002-ம் வருடம். டூரிஸ்டுகளின் சொர்க்கமான இந்தோனேஷியாவின் பாலித் தீவில் அது நடந்தது.

நேரம் இரவு பதினொரு மணி. அங்கே அது உறங்கும் நேரமல்ல. உல்லாச நேரம். உழைத்துக் களைத்தவர்கள், உல்லாசத்துக்கென்றே வந்தவர்கள், அத்தனை பேரும் இருட்டில் வெளிச்சத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஹோட்டல்கள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. இரவு விடுதிகளில் பாட்டும் கூத்தும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன. நடனப் பெண்கள் ஒருபுறம், வாத்திய கோஷ்டிகள் மறுபுறம். இடையில் அரை மயக்கத்தில் சரிந்து கிடந்த டூரிஸ்டுகள்.

Paddy's Bar என்கிற இரவு விடுதிக்குள் ஒருவன் நுழைந்தான். குடிக்க வருபவன் மாதிரி. ஒரு வகையில் உண்மையும் அதுதான். ஒரே ஒரு திருத்தம். அவன் குடிக்க வந்தது மதுவை அல்ல. உயிர்களை.

அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த வேலை மிக எளிமையானது. 'உள்ளே போ. மறக்காமல் உடம்பில் ஒரு குண்டு கட்டிக் கொண்டு போ. கூட்டத்தின் நடுவே சென்று வெடிக்கச் செய்து செத்துப் போ. சாதாரண குண்டுதான். உன் ஒருத்தனைத்தான் அது கொல்லும். சில பேருக்குக் காயம் ஏற்படலாம். அது முக்கியமல்ல. அது ஒரு ஸ்டார்ட்டர். அவ்வளவுதான். குண்டு வெடித்த அதிர்ச்சியில் பாரில் இருக்கும் அத்தனை பேரும் வெளியே ஓடி வரவேண்டும். என்ன ஒரு நூறு, இருநூறு, முந்நூறு பேர் உள்ளே இருப்பார்களா? போதும். அவர்கள் அத்தனை பேரும் பார் வாசலில் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவரும் அந்த ஒரு கணம் போதும். மிச்சத்தை வெளியே காத்துக்கொண்டிருக்கும் உன் சகாக்கள் பார்த்துக் கொள்வார்கள். பை த வே, நீ இறக்கப் போகிறாய். அது பிரச்னையில்லை. சொர்க்கத்தில் உனக்கு ஒரு சொந்த வீடு தயாராக இருக்கிறது. போய் வா.'

அவன் போனான். முதுகுப் பக்கம் ஒரு வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு. கையில் ரிமோட். செல்போன் மாதிரி. இரவு விடுதியில் யார் பரிசோதித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

எனவே, ஒரு பிரச்னையும் இல்லாமல் உள்ளே போனான். யாரோ பாடிக்கொண்டிருந்தார்கள். யார் யாரோ ஆடிக்கொண்டிருந்தார்கள். நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் வட்ட வடிவ மேசைகளை நிறைத்துக் குடித்துக்கொண்டிருந்தார்கள். சப்ளை செய்யும் பேரர்கள். சல்லாபம் செய்யும் இளசுகள். சங்கீதம் வழங்கும் கலைஞர்கள். 'நல்லது நண்பர்களே, இன்று உங்களுக்கு இறுதி நாள். நான் நாளை சொர்க்கத்துக்குப் போவேன். நீங்கள் நரகத்துக்குப் போங்கள்.'

அவன் சற்றும் தயங்காமல் கையிலிருந்த ரிமோட்டை அழுத்தினான். குண்டும் அவனும் வெடித்துச் சிதறினார்கள். ஒரு கணம்தான். அந்த மாபெரும் ஹாலில் எழுந்த சத்தமும் கூச்சலும் குழப்பமும் புகை மண்டலமும் அத்தனை பேரின் போதையையும் இறக்கிவிட்டது. அலறிக்கொண்டு வெளியே ஓடத் தொடங்கினார்கள். அதுதானே அவர்கள் எதிர்பார்த்தது?

பாரின் வாசலில் தயாராக அவர்கள் ஒரு மிட்சுபிஷி காரை நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆளில்லாத கார். ஆனால், வெடி மருந்து நிரம்பிய கார். மிகக் கவனமாகத் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட அம்மோனியம் நைட்ரேட் கலவை அது. இந்தோனேஷியாவில் பரவலாகப் பயன்படுத்தப்படும் விவசாய உரத் தயாரிப்பு மூலப்பொருள். அதை ஒரு பிளாஸ்டிக் கண்டெயினரில் நிரப்பி, மேலுக்கு வேறு சில வீரிய ஜிகிரிகள் சேர்த்துத் தயாரித்திருந்தார்கள். தவிரவும் அதன் அளவு அதிகம். (துல்லியமான தகவல் வெளியாகவில்லை. சம்பவத்தின் வீரியத்தைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது இது.)

பாரை விட்டு மக்கள் கூட்டமாக வெளியே ஓடி வந்த கணத்தில், சுமார் அறுபத்தைந்து அடி தொலைவில் பதுங்கியிருந்து, ரிமோட் கண்ட்ரோல் மூலம் அந்த வெடி மருந்தை வெடிக்கச் செய்தார்கள்.

பிராந்தியமே அலறிவிட்டது. வெடித்த குண்டின் சக்தி கற்பனைக்கு அப்பாற்பட்டது. ஒரே கணம்தான். 202 பேர் அலறக்கூட அவகாசமில்லாமல் இறந்துபோனார்கள். அதில் 165 பேர் வெளிநாட்டுக்காரர்கள். கணிசமாக ஆஸ்திரேலியர்கள். இறந்து கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை முந்நூறைத் தாண்டியது. குண்டின் வீரியத்தில் அந்தச் சாலையிலிருந்த அத்தனை கட்டடங்களுமே லேசாக அதிர்ந்தன. அருகிலிருந்த கட்டடங்கள் பலவற்றின் பகுதிகள் உடைந்து விழுந்தன. விரிசல் விடாத கட்டடமே இல்லை.

பாலியில் அது ஒரு முக்கியமான வர்த்தகப் பகுதி. ஜனக்கூட்டம் மிகுதி. வெளிநாட்டுக்காரர்கள் எப்போதும் வந்து போய்க்கொண்டே இருப்பார்கள். தவிரவும், அமைதிக்கும் செழுமைக்கும் பேர்போன இடம். ஒரு வகையில் இந்தோனேஷியாவின் சரித்திரத்திலேயே அதற்குமுன் அப்படியொரு படு மோசமான தாக்குதல் நடத்தப்பட்டதில்லை. திட்டமிட்ட தாக்குதல். ஒரு குறிப்பிட்ட கூட்டத்தை, ஒரே இடத்தில் கூடவைத்து, வெடி வைத்துத் தகர்ப்பது என்பது கற்பனையே செய்யமுடியாத காரியம். கூட்டம் இருக்கும் இடத்தில் குண்டு வைத்திருக்கிறார்கள், அல்லது குண்டு வைக்கப்பட்ட இடத்தில் தெரியாமல் மக்கள் கூடி இறந்து போயிருக்கிறார்கள்.

இது பொறியில் மசால்வடை வைத்து, எலியை வரவழைத்துக் கொல்வது மாதிரியான காரியம். பாருக்குள் ஒரு தற்கொலைப் படை வீரனை அனுப்பி, பலி கொடுத்ததுதான் ஒரே பெரிய செலவு. பதிலுக்கு அவர்கள் பெற்றது 202 உயிர்கள். தவிரவும் நிகழ்ந்த செயலுக்கு சாட்சியாக கார் வெடித்துச் சிதறிய இடத்தில் ஒரு மீட்டர் ஆழத்துக்கு ஒரு பள்ளமே ஏற்பட்டிருந்தது.

இரவு நேரம். எனவே, நடந்த சம்பவத்தை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்ளும் நிலையில் அங்கே யாரும் இல்லை. அரை போதை ஒரு பக்கம். பதற்றம் ஒரு பக்கம். பயம் இன்னொரு பக்கம். சைரன்கள் ஒலிக்க காவல் வண்டிகள் வந்து சேர்ந்தன. இங்கே தீயணைப்பு வண்டிகள். அங்கே விசாரணை அதிகாரிகள். உடல்களையும் உயிர்களையும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் ஆம்புலன்சுகள் இன்னொரு பக்கம்.

துரதிருஷ்டவசமாக உள்ளூரில் இருந்த சங்லா மருத்துவமனையில் அத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கவோ, குறைந்தபட்சம் படுக்க வைக்கவோ கூட வசதிகள் இல்லாமல் போய்விட்டது. தவிரவும் டாக்டர்களைத் தேடுவதிலும் பிரச்னை ஏற்பட்டது. இந்தக் காத்திருப்பிலேயே மேலும் பல உயிர்கள் போயின. பெரும்பாலான மக்கள் தீக்காயத்தில் தவித்துக் கொண்டிருந்தார்கள். முழு உடலும் பற்றி எரிந்து கொண்டிருந்த நிலையில் தண்ணீர் ஊற்றியும் துணியால் சுற்றியும் தீயை அணைத்து ரணகளமாக எடுத்து வந்து போடப்பட்டிருந்தவர்கள் அவர்கள். ஆகவே எழுந்த அலறலும் ஓலமும் குலைநடுங்கச் செய்வதாக இருந்தது.

முடிந்தவரை சமாளித்து சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த சமயத்தில், சில நிமிட இடைவெளியில் செய்தி வடிவில் இன்னொரு குண்டு வந்து தாக்கியது. பாலியின் தலைநகரமான டென்பஸாரில்

இருந்த அமெரிக்கத் தூதரகத்தில் இன்னொரு குண்டு வெடித்திருந்தது. மேற்படி கார் குண்டு சம்பவத்துக்குச் சில கணங்கள் முன்னதாகவே. இந்தக் களேபரத்தில் அந்தக் குண்டு வெடித்த செய்தி வந்து சேரக் கொஞ்சம் தாமதமாகியிருந்தது; அவ்வளவுதான்.

அலறிவிட்டது பாலித்தீவு. என்ன நடந்துகொண்டிருக்கிறது? அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்திருக்கின்றன. ஒன்று நடு வீதியில். இன்னொன்று அமெரிக்கத் தூதரகத்தில். யார்? யார் செய்தார்கள்? எதற்காக? இரண்டோடு சரியா? இன்னும் இருக்கிறதா?

அந்த இரவு முழுவதும் பாலியில் யாரும் உறங்கவில்லை. குண்டு வெடித்த சத்தம் பல கிலோ மீட்டர்களுக்குக் கேட்டிருந்தது. சத்தத்துக்குப் போட்டியாக செய்தியும் விரைந்து பரவியதில், மக்கள் முழு இரவையும் வீதியிலேயே இருந்து கழித்தார்கள். பயம். பதற்றம். எந்தக் கணத்தில் இன்னும் என்ன நிகழுமோ என்கிற கலவர உணர்வு. யார் செய்திருப்பார்கள், எதற்காக என்கிற கேள்விகள். பேசிப்பேசித் தீர்த்தார்கள்.

மறுநாள் காலை காவல் துறைத் தலைமை அதிகாரி பேசினார். 'இந்தோனேஷியாவின் சரித்திரத்திலேயே இம்மாதிரியான கொடூரமான தாக்குதல் இதற்குமுன் நிகழ்ந்ததில்லை. சந்தேகமில்லாமல், இது ஜமா இஸ்லாமியாவின் வேலை. வேறு யாருக்கும் இத்தனை பலம் கிடையாது. இத்தனை திட்டமிடும் சக்தி கிடையாது. இத்தனை தீவிரமும் கிடையாது.'

பாலி குண்டுவெடிப்பு என்று சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட அந்தச் சம்பவத்துக்கு முன்னும் பின்னும் எத்தனையோ காரியங்களில் ஜமா இஸ்லாமியாக்காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள், வெற்றியும் தோல்வியும் மாறி மாறிப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், முதல் முறையாக அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை பரந்து விரிந்த முழு உலகமும் தெற்காசியத் தீவிரவாத நெட் ஒர்க் குறித்து, உட்கார்ந்து கவலைப்படத் தொடங்கியது அந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான்.

தவிரவும் செப்டம்பர் 11, 2001-ல் அமெரிக்க வர்த்தக மையக் கட்டடங்கள், தாக்கித் தகர்க்கப்பட்ட அதிர்ச்சியிலிருந்தே உலகம் விடுபடாத நிலையில், (அதிலும் ஜமாவுக்குச் சம்பந்தம் இருந்தது!) சரியாக ஆறே மாதத்தில் இப்படியொரு தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்றால், எத்தனை துணிச்சல், நெஞ்சுரம், தீவிரம்?

ஒரே சமயத்தில் இரண்டு தாக்குதல்கள். ஒன்றில் ஆஸ்திரேலியர்கள் எண்பதுக்கும் மேல் இறந்துபோயிருந்தார்கள். இன்னொரு தாக்குதலின் இலக்கு அமெரிக்கத் தூதரகம். இங்கே இழப்பு பெரிதாக இல்லை என்றாலும் தாக்குதலின் நோக்கம் தெளிவாக இருக்கிறது.

ஜமா இஸ்லாமியா. யார் இவர்கள்? அப்போதிலிருந்துதான் தீவிரமாக ஆராய ஆரம்பித்தார்கள்.